ISSN NO.2581-5938
மலர்-4, இதழ்-1, சனவரி 2021

# பண்பாட்டு மானிடவியல் பார்வையில் பொன்னீலனின் படைப்புகள்

**சு. வினோதா**

உதவிப்பேராசிரியர் , தமிழ்த்துறை , சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரி,
சேலம்-5 , தமிழ்நாடு, இந்தியா

---

**முன்னுரை**

மானிடவியல் என்பது மனித இனம் பற்றிய அறிவியல் கல்வித்துறை ஆகும். இம்மானிடவியல் துறை மனித குலத்தின் சமூக பண்பாட்டு உயிரியல் நிலைகளை ஆராய்கின்றது. அனைத்து கால அனைத்திட மக்களின் வாழ்வியல் கூறுகளை அறிவதையே இலக்காகக் கொண்டு செயல்படுகின்றது. ஒரு குறிப்பிட்ட குறியீட்டு முறையின் கீழ் உலகைக் காண்பதாக இவ் ஆய்வு வளர்ந்து வருகின்றது. மக்களைப் பற்றி அறிந்து கொள்ள அவர் தம் படைப்புகளான இலக்கியங்களை அடிப்படைகளாக்கி ஆராய்ந்து வருகின்றது. செவ்விலக்கியங்களைக் காட்டிலும் நாட்டார் இலக்கியங்களிலும் நாட்டார் வாழ்வியலைப் பதிவு செய்யும் பிற இலக்கியங்களிலும் இம்மானிடவியல் கூறுகளை அதிகம் காண முடிகின்றது. அந்த அடிப்படையில் நாஞ்சில் நாட்டு மக்களது வாழ்வியலை அதிகமாய்ப் பதிவு செய்து வரும் நாஞ்சில் நாட்டு எழுத்தாளர்களுள் பொன்னீலனும் ஒருவர். அவர் படைப்பு நாஞ்சில் நாட்டு மக்களின் வாழ்வியலையும் வாழ்வியல் தத்துவங்களையும் சாணார் எனப்படும் நாடார் இனம் சார்ந்தும் பெரிதும் பதிவு செய்துள்ளது. அவற்றுள் மறுபக்கம், பிச்சிப்பூ ஆகிய புதினங்களை ஆய்வுக்குட்படுத்தி அவற்றுள் பதிவாகியுள்ள பண்பாட்டு மானிடவியல் சார் செய்திகளை அறிவது இக்கட்டுரையின் நோக்கமாக அமைகின்றது.

**மானிடவியல் - விளக்கம்**

மானிடவியல் என்பது ‘Anthropology’ எனப்படுகின்றது. ‘Anthops’, ‘Logos’ என்னும் கிரேக்கச் சொற்களை மூலமாகக் கொண்டவை. அதன் பொருள் மனிதனைப் பற்றிய அறிவியல் என்பதாகும். மனிதனை உயிரியல் நிலையிலும் பண்பாட்டு நிலையிலும் ஆய்வு செய்யும் ஓர் அறிவியல் துறையே மானிடவியல் துறையாகும்.

**மானிடவியலின் வகைகள்**

1. உடல் சார் மானிடவியல்
2. பண்பாட்டு மானிடவியல்
3. தொல்லியல்
4. மொழியியல்

**பண்பாட்டு மானிடவியல்**

பண்பாடு என்ற சொல்லிற்குப் பண்படுதல் என்று பொருள். மனிதர்களின் பண்பட்ட வாழ்க்கை முறையையே இச்சொல் குறிப்பிடுகின்றது. மனிதன் அடுத்த சந்ததிக்கு விட்டுச் செல்லும் பண்பட்ட வாழ்க்கைமுறையையும் கருத்துகளையும் தேர்ந்த நடத்தைகளையுமே பண்பாட்டு மானிடவியல் துறை ஆராய்கின்றது.

**இனக்குழுவியல்**

இனக்குழுவியல் என்பது மனித நாகரிகத்தைப் பற்றிய சிந்தனை ஆகும். இவ் ஆய்வு தனிப்பட்ட இனக்குழு பற்றி ஆராய்கின்றது.

**இனவரைவியல் (Ethnography)**

இனவரைவியல் சமூகப் பண்பாட்டு மானிடவியலின் உட்கூறாகும். “இனவரைவியல்" Ethnography என்று ஆங்கிலத்தில் அழைக்கப்படுகின்றது. ‘Ethnos’, என்பதற்கு “இனம்’, “இனக்குழு", மக்கள் என்று பொருள்படும். மானிடவியலின் முக்கிய பிரிவுகளுள் ஒன்றாக இனவரைவியல் அமைகின்றது. ஒரு குறிப்பிட்ட மக்கள், குழு, அல்லது பண்பாட்டை விவரிக்கும் கலை அல்லது அறிவியலே இனவரைவியலாகும்.

**இனவரைவியல் கூறுகள்**

புவிச்சூழலியல், சுற்றுச்சூழல். கால நிலை, குடியிருப்பு முறை, உறைவிட முறை, பொருள் சார் பண்பாடு, குடும்ப அமைப்பு, திருமண முறை, வாழ்வியல் சடங்குகள், மக்களின் உளவியல் பாங்குகள்,

குழந்தை வளர்ப்பு முறை, பண்பாட்டுமயமாக்கமுறை, மணக்கொடை, மணவிலக்கு, வாழ்க்கைப் பொருளாதாரம், தொழில் பகுப்புமுறை, உற்பத்தி முறை, நுகர்வு முறை, பங்கீட்டு முறை, பரிமாற்ற முறை, கைவினைத் தொழில்கள், அரசியல் முறை, அதிகார உறவுகள், சமூகக் கட்டுப்பாடு, மரபு சார் சட்டங்கள், சமய நம்பிக்கைகள், சடங்குகள், வழிபாட்டு முறைகள், மந்திரம், சூனியம், விழாக்கள், இசை, விளையாட்டுகள், விழாக்கூறுகள், ஈமச்சடங்குகள் ஆகியவை பற்றிய செய்திகளே இனவரைவியல் கூறுகளாகும்.

**இனவரைவியலின் பயன்**

இனவரைவியல் ஆய்வினால் ஒரு குறிப்பிட்ட இனக்குழு மக்களைப் பற்றி முழுமையாக அறிய வாய்ப்பாகின்றது.

கள ஆய்வின் மூலம் செய்திகளைத் திரட்டுவதால் சமூக ஆவணமாகவும் திகழ்கின்றது. இனவரைவியலாளர் இனக்குழு மக்களிடம் கலந்தாய்வு செய்வதால் அவர்களுக்கு உதவிகள் புரிய வாய்ப்பாகின்றது.

**தற்கால இலக்கியங்களில் இனவரைவியல்**

தற்கால இலக்கியங்களில் இனவரைவியல் தொடர்பான செய்திகள் மிகுதியாக இடம்பெறுகின்றன. அதிலும் புதினங்களில் இனவரைவியல் பற்றிய செய்திகள் பெரும்பான்மையாக இடம்பெற்றுள்ளன. புதின ஆசிரியர் அவருடைய அனுபவம், உற்றுநோக்கல், ஆராய்ச்சி என்ற மூன்றின் அடிப்படையில் புதினங்களைப் படைக்கின்றார்.

**இனவரைவியல் புதின வகைகள்**

- வட்டாரம் சார்ந்த புதினங்கள்
- திணை சார்ந்த புதினங்கள்
- இனம் சார்ந்த புதினங்கள்

**பொன்னீலன் புதினங்களில் இனவரைவியல்**

தற்காலத்தில் இனவரைவியல் நெறிகளில் புதினங்களைப் படைத்து வரும் புதின ஆசிரியர்களுள் படைப்பாளர் பொன்னீலனும் ஒருவர். நாஞ்சில் நாட்டு மக்களின் பண்பாடு, கலாச்சாரம், அவர்தம் வாழ்வியல் முறைகளை அவருடைய அனுபவத்தின் அடிப்படையிலும் அப்பகுதி மக்களின் வாழ்வியலை உற்று நோக்கிப் பெற்ற அறிவின் அடிப்படையிலும் ஆராய்ச்சியின் அடிப்படையிலும் செய்திகளைச் சேகரித்து புதினங்களைப் படைத்து வருகின்றார். அவருடைய புதினங்கள் குமரி மாவட்டத்து வட்டாரத்தைச் சார்ந்து அமைகின்றன. அவரது புதினங்களில்

1. சிறுதெய்வ வழிபாடு சார் பண்பாடு
2. நம்பிக்கை சார் பண்பாடு
3. புழங்கு பொருட்கள்
4. சமூகக்கட்டுப்பாடுகள்

**சாணார்கள் - பெயர்க்காரணம்**

பொன்னீலனுடைய படைப்புகள் பெரும்பாலும் நாடார் இனத்தின் பண்பாட்டைச் சுட்டுவனவாகவே உள்ளன. நாடார் இனத்தைச் சாணார் என்னும் சுட்டுவர். இவ்வினத்தின் சரியான வடிவம் சான்றோர். இச்சொல் „சால்" என்னும் வேர்ச்சொல்லிலிருந்து பெறப்பட்டுள்ளது. சான்றோர் என்பதே சான்றார் என மருவி சாணார் என்று மாறியுள்ளது என்பது பொன்னீலனின் ஆய்வு முடிவாகஅமைந்துள்ளது *(பொன்னீலன், தெற்கிலிருந்து (சமூகவியல் ஆய்வுக்கட்டுரைகள்) பக்கம் 32.).*

**சிறுதெய்வ வழிபாடு**

பொன்னீலனின் புதினங்களில் சிறுதெய்வ வழிபாடு சார்ந்த பண்பாடுகள் அவரது „மறுபக்கம்" என்னும் புதினத்தில் பதிவாகியுள்ளன. அவரது புதினங்களில் சிவனணைஞ்சான் பெருமாள் சிவனணைஞ்சியம்மை, மண்டைக்காட்டு அம்மன், பத்திரகாளியம்மன், இசக்கியம்மன் போன்ற தெய்வங்கள் பற்றிய செய்திகளும் வழிபாட்டுமுறைகளும் ஐயா வைகுண்டர் கதைகளும் அவரது சமூகப்பணிகளும் அவர் மக்களால் தெய்வமாக்கப்பட்ட தன்மையும் கூறப்பட்டுள்ளன.

**சிவனணைஞ்சான் பெருமாள் சாமி சிவனணைஞ்சியம்மை கதை**

சிவனணைஞ்சான் பெருமாள் சாமி தென்காட்டு ராஜா. திருமணமாகாதவர். அவர் அவரது குடும்பத்திற்குத் துணி வெளுக்கும் வண்ணார் இனத்தைச் சார்ந்த சிவனணைஞ்சியம்மையின் மீது காதல் கொண்டு தன் வீட்டில் இருத்திக் கொள்கிறார். அதனால் கோபம் கொண்ட வண்ணார் இனத்தவர்கள்

சிவனணைஞ்சான் பெருமாள் சாமியை வெட்டி வீழ்த்துகின்றனர். அவரை எரித்த சிதையில் விழுந்து சிவனணைஞ்சியம்மையும் இறந்துவிடுகின்றார்.

"இரண்டு பேரையும் தென்பகுதி மக்கள் தெய்வமாக வணங்குகின்றார்கள்"என்று படைப்பாளர் பொன்னீலன் கூறுகின்றார். மேலும் இந்தக் கதையைக் கொடை நேரத்தில் பாடுவார்கள் என்று அதன் வழக்கத்தை "மறுபக்கம்" *(பொன்னீலன், மறுபக்கம்)* புதினத்தின் வழி எடுத்துரைக்கின்றார்.

**மண்டைக்காட்டு அம்மன் கோவிலின் பூசைமுறை**

மண்டைக்காட்டு அம்மன் கோவில் கொடை நாட்களின் கடைசி நாளன்று நடைபெறும் பூசைக்கு ஒடுக்குப்பூசை என்று பெயர். பூசைக்கு உண்டான சோறு கறிக்கு ஒடுக்குச்சோறு என்று பெயர். அதற்கென்று விரதமிருந்து ஏழுபேர் தலையில பனையோலைக் கடவங்களை அவர்கள் தலையில் ஏத்தி ஒரே வெள்ளைத் துணியால் ஏழு கடவங்களையும் சேர்த்து மூடிக்கொண்டு வருவார்கள். வாய்களை வெள்ளைத் துணியால் மூடுவார்கள். ஆண்கள் சட்டை போட்டிருக்க மாட்டார்கள். தலைக்கு மேல வெள்ளைப் பாவாடையை விரித்துப் பிடித்திருப்பார்கள். பாதை முழுவதும் மாத்து விரிப்பார்கள். தீவட்டி ஏந்தி சாத்தாங்கோவிலில் இருந்து ஊர்வலம் தொடங்கும். கடைசியில் ஒரு கும்பிளங்காய்க்கு மஞ்சளும் சுண்ணாம்பும் தடவி அதைப் பூசாரி வெட்டுவார். ரத்தத்துளி சுவரில் தெறிக்கும். மனிதர்களைப் பலி கொடுத்த நிகழ்வின் எச்சமாக இவ்வழக்கம் பின்பற்றப்பட்டு வருவதாக "மறுபக்கம்" *(பொன்னீலன், மறுபக்கம்)* புதினத்தில் ஆசிரியர் விளக்குகிறார்.

**மக்களின் நம்பின்கை சார் பண்பாடு**

நாஞ்சில் நாட்டு சிறுதெய்வங்களின் கோவில்களில் மரக்கட்டையிலும் வெள்ளியிலும் செய்யப்பட்ட கை கால் தலை கண் முண்டம் போன்ற மனித உடலின் பாகங்கள் விறகப்படுகின்றன. உடலிலே நோய் உள்ளவர்கள் எந்தப் பாகத்தில் நோய் உள்ளதோ அந்தப் பாகத்தை வாங்கி அம்மனுக்குக் காணிக்கை போடுவது அவர்களது நம்பிக்கையாகும். நரபலி கொடுக்கின்ற வழக்கம் கூட எஜமானர்களின் உடல் நோய் தீர்வதற்காக அடிமைகளை பலியிடுவதாக நடந்தேறியது என்கின்றார் பொன்னீலன். இதனை

"எசமானுக்கு ஏதாவது நோயின்னா ஆடு மாடுகள வெட்டுறதுக்குப் பதிலாக அடிமைகள அம்மனுக்குப் பலி கொடுத்திருப்பாங்க" *(பொன்னீலன், மறுபக்கம்)* என்னும் அவரது வரிகளின் மூலமாக அறியமுடிகின்றது.

**சபித்தல்**

கோவில் கொடைகளின் போது சாமியின் ஆடுவோருக்கு அம்மங்கொண்டாடியார் என்று பெயர். ஊருக்குக் கெடுதல் செய்வோரையோ கோவிலை அல்லது கோவிலிலுள்ள அம்மனை அவமதிப்போரையோ அம்மங்கொண்டாடியார் சபிக்கின்றார். பொங்கல் சமைந்து கொண்டிருக்கக்கூடிய பானைக்குள் கைவிட்டு நெருப்பை அள்ளி அவமதித்தோர் அல்லது அவரது ஊர் இருக்கும் திசை நோக்கி "இதோட அதிகாரம் முடிஞ்சி" என்று மூன்று முறை வீசினால் அந்த ஊர் அழிந்து போகும்" *(பொன்னீலன், பிச்சிப்பூ, பக்கம் 41)* என்ற நம்பிக்கை பொன்னீலனின் "பிச்சிப்பூ" புதினத்திலே பதிவாகியுள்ளது.

**நாஞ்சில் நாட்டு மக்களின் புழங்கு பொருட்கள்**

நாஞ்சில் நாட்டின் மிகப்பெரிய தொழில் ஆதாரமாகத் திகழ்வது பனைமரம். அதன் பயனாகக் கிடைப்பன கள் பதநீர், நுங்கு போன்ற விளை பொருட்களே. நீராளம் என்பது சுண்ணாம்பு தடவாத பயினி. பல மருந்துகளைச் சின்ன மூட்டையாகக் கட்டி பானைக்குள் போட்டிருப்பார்கள். போதை தராது. உடலுக்கு மிகவும் நன்மையைச் செய்யவல்லது. கள் நாஞ்சில் மக்கள் கள்ளை ஆகாரமாக எண்ணி அருந்தியிருக்கின்றார்கள். தாய்ப்பாலுக்கு இணையாகக் கொண்டு போற்றியிருக்கிறார்கள்.

அடியோலை நாஞ்சில் மக்கள் பயன்படுத்திய பொருட்களில் ஒன்று அடியோலை. உயர்சாதியினர் மட்டுNமு தோல் செருப்பு அணிந்திருந்த காலகட்டத்தில் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்தவர்கள் பனையோலையால் ஆகிய அடியோலையை அணிந்திருக்கின்றனர். ஒவ்வொரு கால் அளவிற்கும் ஏற்றார் போல் தடுக்குகள் பின்னி பனை நாரிலே வாரு போட்டு பயன்படுத்தியுள்ளனர். வசதிக்குத் தக்கவாறு சாதா ஓலையையோ அல்லது குருத்தோலையையோ பயன்படுத்தி நீள வாக்குல வார்ந்து சாய நீரிலே வைத்து அவித்து பல வண்ணங்களிலும் பயன்படுத்தியிருக்கின்றார்கள். வசதி உள்ளவர்கள் சாய ஓலைகளுக்குக் கீழே வெள்ளை ஓலைகளை வைத்துப் பொத்திப் பொத்தி மெத்தை போல அமைத்துக் கொள்வார்கள். போலீஸ்காரர்கள் பயன்படுத்துவதைப் போன்று மூடு செருப்புகளும் பின்னிக் கொள்வார்கள் என்று ஆசிரியர் பொன்னீலன் நாஞ்சில் மக்கள் பயன்படுத்திய அடியோலை பற்றி "மறுபக்கம்" *(பொன்னீலன், மறுபக்கம்)* புதினத்தில் விளக்குகிறார்.

**பனந்தந்தியின் பயன்பாடு**

நாஞ்சில்நாட்டு மக்கள் பனந்தந்தி என்றொரு தகவல் பரிமாற்றத்தைப் பயன்படுத்தியிருக்கின்றார்கள். திருச்செந்தூரில் இருந்து திருவனந்தபுரம் வரையிலும் அக்காலத்தில் பனங்காடுகள் நிறைந்திருந்தன. திருச்செந்தூரின் ஒரு பனையில ஏறின ஒரு தொழிலாளி பனைக்குப் பனை தாவி நொங்கும் பதனீரையும் உண்டுகொண்டே திருவனந்தபுரத்தைச் சென்று சேர்ந்திடுவானாம். போகின்ற வழியிலே இருக்கின்ற ஊர்களுக்குச் சென்று தகவல்களைப் பரப்பிடுவானாம். இத்தகைய புதுமையான பனந்தந்தி முறை பற்றிப் பொன்னீலன் தன்னுடைய 'பிச்சிப்பூ' நாவலிலே பதிவு செய்துள்ளார்.

**முகப்பூச்சின் பயன்பாடு**

நாஞ்சில்நாட்டு மக்கள் முகப்பொலிவோடு காடசியளிப்பதற்காக இயற்கையான முகப்பூச்சினைப் பயன்படுத்தியிருக்கின்றார்கள். "மஞ்சளையும் சுண்ணாம்பையும் கணக்கா எண்ணெயில் கலந்து உள்ளங்கையில் தேய்த்து நெற்றி, கன்னம், மூக்கு, கழுத்து, காது மடல் என்று எல்லா இடங்களிலும் லேசாகப் பூசிவிடுவார்கள். பின்னர் ஒரு பருத்தித்துணியால் மேலோட்டமாகத் துடைத்துவிட்டால் அந்த நபர் கருப்பா சிவப்பா என்று தெரியாத அளவிற்குப் பொலிவாகிவிடுவார்" (பொன்னீலன், பிச்சிப்பூ, பக்கம் 41) என்று அந்தக் கால மக்கள் பயன்படுத்திய முகப்பூச்சினை "பிச்சிப்பூ" புதினத்தில் எடுத்துரைக்கின்றார் ஆசிரியர்.

**சமூகக்கட்டுப்பாடுகள்**

சமூகக்கட்டுப்பாடு என்பது நாடார் இனத்தவர் தங்களுக்குள் வரித்துக் கொண்ட கட்டுப்பாடுகள் என்பதற்கு மாறாக நாடார் தவிர்ந்த ஏனைய சமூகம் நாடார் மீது செலுத்திய ஆதிக்கம் சார்ந்த கட்டுப்பாடுகள் என்பதாகப் பொருள் கொள்ளப்படுகின்றது. அக்காலத்தில் பனையும் பனை சார்ந்த துணைத்தொழில்களுமே நாடார்களின் முக்கியத் தொழில்களாக இருந்துள்ளன. அதன் அடிப்படையில் அவர்கள் பனைச்சொத்துடைய நாடார்கள் பனைத்தொழிலுடைய நாடார்கள் என்னும் இருபிரிவுகளில் வாழ்கின்றனர். பனைச்சொத்துடைய நாடார்கள் உயர்வாகவும் பனைத்தொழில் நாடார்கள் தாழ்வாகவும் நடத்தப்பட்டுள்ளனர்.

"உழைக்கும் நாடார்கள் குடைபிடித்தல் கூடாது. செருப்பு அணிதல் கூடாது. மாடி வீடு கட்டக் கூடாது. தங்க நகைகள் அணியக்கூடாது. பெண்கள் கூட மார்பை மறைக்கக் கூடாது. முழங்காலுக்குக் கீழே உடுத்தக் கூடாது. பசு வளர்க்கக் கூடாது. இடுப்பில் குடம் எடுக்கக் கூடாது" *(பொன்னீலன், தெற்கிலிருந்து (சமூகவியல் ஆய்வுக்கட்டுரைகள்), பக்கம் 38)* என்னும் வரிகளில் பொன்னீலன் நாடார் இனத்தவருக்கு பிற சமூகத்தினர் ஏற்படுத்திய கட்டுப்பாடுகளை அறிய முடிகின்றது.

**தொகுப்புரை**

- பொன்னீலனின் சிறுதெய்வ வழிபாடு குறித்த பகுதிகளில் கொலையுண்டவர்களையோ மக்களுக்காகப் போராடி இறந்தோரையோ சிறுதெய்வமாக வழிபட்டிருக்கின்றார்கள்.
- நாஞ்சில் நாட்டு மண்டைக்காட்டு அம்மனின் பூசைமுறை மற்றும் அது தொடர்பான காரணங்களையும் அறிய முடிகின்றது.
- சிறுதெய்வங்களின் கோவில்களில் மரம் மற்றும் வெள்ளியிலான கை கால் தலை உடல் போன்ற உறுப்புகளைக் காணிக்கையாக்குவது எஜமானர்களின் நன்மைக்காக அடிமைகளை நரபலியிடுதலின் எச்சம் என்கின்றார் ஆசிரியர்
- கோவிலையோ தெய்வத்தையோ வழிபாட்டு முறைமைகளையோ அவமதிப்போரை அம்மங்கொண்டாடியார் நெருப்பள்ளி வீசி சபித்தல் என்ற வழக்கம் பதிவாகியுள்ளது.
- நாஞ்சில் நாட்டு மக்களின் உடல் உறுதிக்குக் காரணம் பதநீரும் கள்ளுமே என்று கூறி பதநீர் இறக்குதல் நீராளம் மற்றும் கள் இறக்கும் முறைமைகளை ஆசிரியர் எடுத்துரைத்துள்ளார்.
- நீராளம் குறித்த விளக்கங்களும் ஆசிரியர் வாயிலாக அறியப்படுகின்றது.
- பனையோலையால் உருவாக்கப்படும் அடியோலை எனப்படும் தாழ்த்தப்பட்ட இனத்தைச் சார்ந்த மக்கள் பயன்படுத்தும் செருப்பு பற்றிய குறிப்புகளையும் அறிய முடிகின்றது.
- பனந்தந்தி எனப்படும் மனிதர் வழியிலான தகவல் பரிமாற்றம் நாவலில் பதிவாகியுள்ளமை புதுமையான செய்தியாகும்.
- பெண்கள் பயன்படுத்தும் இயற்கை முறையிலான மஞ்சள் சுண்ணாம்பு எண்ணெய்க் கலவையிலான முகப்பூச்சு பற்றிய செய்தியும் நாஞ்சில் நாட்டு மக்கள் அழகுணர்ச்சியில் காட்டிய ஆர்வத்திற்கான சான்றாகும்.

## PONNILAN'S WORKS ON CULTURAL ANTHROPOLOGY

**S. Vinotha**

ISSN NO.2581-5938
மலர்-4, இதழ்-1, சனவரி 2021

1. 'Manudaviyal' is called 'Anthropology'. This term came from the Greek words 'Anthrops', 'logos'. That means scientific study of human beings. The field of Anthropology is the study of the biological and cultural state of humankind.
2. Ponnelan's 'deity worship' (Siru Deiva vazhipaadu), mentioned the areas dedicated to the people, those who have been murdered or who have died for people by fighting, are worshipped as a deity.
3. Nanjilnadu skull wild Goddess (Nanjilnadu Mandaikaattu Amman) worship system and the reasons for it can be known.
4. The author says that the offering of wood and silver such as hand, foot, head and body in the temples of the deities is a remnant of the slaughter of slaves for the benefit of the masters.
5. It has been reported that those who insult the temple or the deity or the worship system are cursed by Ammangondadiyar throwing the firewood.
6. The author has mentioned that the reason for the physical stability of the people of Nanjil is the palm tree water and toddy, water depth (Neeralam) including the process of uploading palm tree water and toddy process.
7. Explanations about water depth (Neeralam) are also known, through the author.
8. It is also possible to know the references of the shoes used by the people belonging to the lower caste called 'Adiolai' which are made of palm leaves.
9. The man-through communication called Panandanti is the innovative new message reported in the novel.
10. The news about the natural yellow lime oil compound used by women is also a testament to the interest shown by the people of Nanjing in aesthetics.